CARMEL FATIMA COLLEGE RULE'S & REGULATION'S

# விதி - 01 வரவு தொடர்பானது

1) மாணவர்கள் அனைவரும் காலை 7.15 மணிக்கு முன்னர் பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும்.

2) துவிச்சக்கர வண்டியில் வரும் மாணவர்கள் கல்லூரியின் நுழைவாயிலிருந்து இறங்கி நடந்து வரவேண்டும்.

3) காலை 7:25 இற்கு மணி அடித்ததும் உடனடியாக சகல மாணவர்களும் நமது வகுப்புக்களில் அமைதியாக இருக்க வேண்டும். இரண்டாவது மணி அடித்ததும் அமைதியாகவும், ஒழுங்காகவும் காலைப் பிரார்த்தனை நடைபெறும் இடத்தில் ஒன்றுகூட வேண்டும்

4) மாணவர்கள் வகுப்பறையிலிருந்து வரும் போதே உயர ஏறுவரிசைப் படி வரவேண்டும்.

5) அமைதி மணி அடிக்க முன்னர் வகுப்பறைகள் சுந்தம் செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு இருத்தல்

வேண்டும்.

6) பொது பிரார்த்தனை நடைபெறும் போது வகுப்பறையில் தங்கியிருப்பதும், நடந்து திரிவதும் அனுமதிக்கப்படமாட்டாது

# விதி - 02 மாணவர் சீருடை தொடர்பானது

1) தரம் 1 தொடக்கம் தரம் 10 வரையான ஆண் மாணவர்கள் நீல நிற காற்சட்டையும் வெள்ளை நிற அரைக்கையுள்ள சேட்டும் அணிந்துவர  வேண்டும்.

2) தரம் 11 தொடக்கம் தரம் 13 வரையான ஆண் மாணவர்கள் வெள்ளை நிற நீளமான காற்சட்டையும் வெள்ளை அரைக்கை உடைய சேட்டும் அணிந்து வரவேண்டும்.

3) தரம் 1 தொடக்கம் 13 வரையான மாணவிகள் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் நீல நிற சீருடையும் செவ்வாய்,வியாழன் ஆகிய தினங்களில் வெள்ளை நிற சீருடையும் அணிந்துவர வேண்டும்.

4) மாணவர்கள் சீருடையை இறுக்கமாக அணிதல் கூடாது.

5) மாணவிகளின் சீருடைகள் முழங்காலுக்குச் சற்று கீழாக இருக்க வேண்டும்.

6) சகல மாணவர்களும் பாடசாலையின் சின்னம் பொறிக்கப்பட்ட கழுத்துப்பட்டியை ஒழுங்காக அணிந்திருத்தல் வேண்டும்.

7) ஆண் மாணவர்கள் தமது சேட் பொக்கற்றின் வலது பக்கத்திலும் மாணவிகள் தமது நீல நிற சீருடையின் இடது பக்கத்திலும் பாடசாலை இலட்சணை பொறிக்கப்பட்ட முத்திரையைத் தைத்திருத்தல் வேண்டும்.

8) அனைத்து மாணவர்களும் (ஆண், பெண்)கறுப்பு நிற சப்பாத்துக்களை அணிந்துவர வேண்டும்.

9) ஆண்கள் கறுப்பு நிற காலுறையும், பெண்கள் வெள்ளை நிற காலுறையும் அணியவேண்டும்.

# விதி - 03 பொதுவானது

1) பாடசாலை மாணவருக்குரிய முறையில் தலைமுடி வெட்டப் பட்டிருக்க வேண்டும்.

2) வளர்ந்த ஆண் மாணவர்கள் அனைவரும் பூரணமாக முகச்சவரம் செய்திருக்க வேண்டும்.

3) மாணவிகள் தலைமுடியை இரண்டாகப் பின்னி நுனியில் மடித்துக் கட்டுதல் வேண்டும்.

4) சகல மாணவர்களினதும் நகங்கள் வெட்டப்பட்டு சுத்தமானதாகவும் நிறப்பூச்சு அற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

5) மாணவிகள் கண் இமைகளை அழகுபடுத்தல் (Shaping) கூடாது.

6) மாணவிகள் சிறிய தோடுகள் மாத்திரமே அணியவேண்டும். வேறு ஆபரணங்கள் எதுவும் அணியக்கூடாது.

7) Camera, CD, Mobile Phone ஏனைய இலத்திரனியல் சாதனங்கள் போன்றன பாடசாலைக்குள் கொண்டுவருவதும், கைக்கடிகாரம் அணிந்து வருவதும் முற்றாகத் தடைசெய்யப் பட்டுள்ளது. இப்பொருட்கள் கைப்பற்றப்பட்டால் மீள அளிக்கப்பட மாட்டாது.

8) காலையில் தினமும் குளித்து, தலைக்கு எண்ணெய் வைத்து , சுத்தமாகப் பாடசாலைக்கு வரவேண்டும்.

9) மாணவர்கள்,ஆசிரியர்களுக்கு வணக்கம் தெரிவிப்பது முக்கியமானது

# விதி - 04 பாட நேரங்களில்

1) ஆசிரியர் வகுப்பறையினுள் நுழைந்தவுடன் அனைத்து மாணவர்களும் எழுந்து, வணக்கம் (Wishes) தெரிவிப்பதுடன் பாடம் முடிந்து செல்லும் போது எல்லோரும் எழுந்து, நன்றி (Thank you) சொல்ல வேண்டும்.

2) பாடசாலைக்கு வருகை தந்த மாணவர் எவரும் பாடசாலை நேரத்தில் பாடசாலையை விட்டு வெளியே செல்லலாகாது தேவையின் நிமித்தம் வெளியே செல்வதாயின் வகுப்பாசிரியரின் அனுமதிக் கடிதத்துடன் பிரதி அதிபரின் அனுமதியை பெற்று, அக்கடிதத்தினை வாயில் காவலாளியிடம் ஒப்படைத்துவிட்டு செல்லவேண்டும்.

3) வகுப்பறையை மாணவர்கள் எந்த வேளையிலும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்.

4) வகுப்பறையினுன் விளையாடுதல், அனுமதியின்றி கரும்பலகையில் எழுதுதல், மேசை மேல் இருத்தல் வகுப்புக்கு வெளியே நிற்றல். வகுப்புக்கு வெளியில் குப்பைகளைப் போடுதல், ஏனைய வகுப்புக் களின் கற்பித்தலுக்கு இடையூறாக இருத்தல் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

5) பாடசாலைத் தளபாடங்களைச் சேதப்படுத்தாமல் பேணிப் பாதுகாத்தல் வேண்டும்.

6) மாணவர்கள் ஆசிரியர்களுடனும் ஏனைய மாணவர்களுடனும் உரையாடும் போது, ஒழுங்கான வார்த்தைகளைப் பிரயோகித்தல் வேண்டும்.

# விதி - 05 இடைவேளை தொடர்பானது

1) இடைவேளை நேரத்தில் மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியே செல்வதும், இடைவேளை தவிர்ந்த ஏனைய நேரங்களில்

சிற்றுண்டிச்சாலைக்கு செல்வதும் குற்றமாகும்.

2) இடைவேளை முடிவிற்கான மணி அடித்ததும் உடனடியாக வகுப்பறையினுள் செல்லவேண்டும்.

# விதி - 06

1) பாடசாலை மாணவர்கள் பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரத்தில்

பாடசாலைக்குச் சமூகம் தரவேண்டியிருப்பின் பாடசாலைச் சீருடை

அணிந்துவர வேண்டும்.

2) பாடசாலை நேரத்தில் வகுப்பு நடைபெறும் போதும் மாணவர்கள் வெளியே செல்வது குற்றமாகும்.

3) பாடசாலை நாட்களில் பாடசாலைக்கு வராத மாணவர்கள் Absent Card இல் பெற்றோரின் கையொப்பத்தைப் பெற்றுவர வேண்டும்.

4) பாடசாலை நாட்களில் பாடசாலைக்கு மூன்று நாட்களுக்கு மேல் தொடர்ச்சியாக வராமல் நிற்கும் மாணவர் வரும்போது பெற்றோருடன் வருகை தரவேண்டும்.

# விதி -07

1) நூலகத்திற்கென ஒதுக்கப்பட்ட பாடவேளை தவிர ஏனைய நேரங்களில் நூலகதினுள் செல்லமுடியாது.

2) வகுப்பறையை விட்டு இடைவேளை தவிர்ந்த நேரங்களில் வெளியே செல்லவேண்டி ஏற்பட்டால்

Exit Card உடனேயே வெளியே வரவேண்டும்.

3) வகுப்பறையை விட்டு மாணவர்கள் அனைவரும் வெளியே செல்லும் போது வரிசையாகச் செல்லவேண்டும்.

# விதி -08

1) பாடசாலை முடிவடையும் மணி ஒலித்தவுடன் அமைதியாக வகுப்பறையில் எழுந்து நின்று பொதுவான பிரார்த்தனையில் பங்குபற்ற வேண்டும்.

2) பிரார்த்தனை முடிவடைந்ததும் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வழியினூடாக மாணவர்கள் அமைதியாக வெளியேற வேண்டும்.

3) நடந்து செல்லும் மாணவர்கள் வரிசையாக சென்றபின் அவர்களைத் தொடர்ந்து சைக்கிளில் வரும் மாணவர்கள் சைக்கிளுடன் வரிசையாக செல்லவேண்டும்.

# விதி - 09 பாடசாலைக்கு வெளியில்

1) அதிபர் அனுமதியின்றி பொது நிகழ்ச்சியில் பங்குபற்ற முடியாது.

2) பாடசாலை நிகழ்வுகளில் அதிபரின் அனுமதியின்றி வேறுபாடசாலை மாணவர்களையும் வெளியாரையும் அழைத்துவருவதும், பங்கு பற்றச் செய்வதும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.